

கடலூர் மேற்கு மாவட்ட கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் காடாம்புலியூரில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளர் அமைச்சர் சி.வெ. கணேசன் சிறப்புரையாற்றினார். நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா. இராசேந்திரன் தலைமை தாங்கினார். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பி.வி. முத்துக்குமார் வி.டி. கலைச்செல்வன் மாவட்டக் கழக துணை செயலாளர் ஆர். எஸ்.எம்.தணிகைசெல்வம்,தலைமை செயற்குழு உறுப்பினர் பாவாடை கோவிந்தசாமி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.எஸ். கணேஷ்குமார், ஒன்றிய கழக செயலாளர்கள் பட்டூர்.வீர. அமிர்தலிங்கம் தி.வேல்முருகன் கனக. கோவிந்தசாமி பா. செங்குட்டுவன்,குணசேகரன், சுரேஷ்,சந்தோஷ்,பொதுக்குழு என்.பலராமன், மற்றும் மாவட்ட கழக ஒன்றிய கழக நகர கழக பேரூர் கழக செயலாளர் உள்ளனர்.



புதுக்கோட்டை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கழக முன்னோடி, க.வீரையா அவர்களின் 31 ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு மாதவி அரிசி ஆலையில் உள்ள நினைவிடத்தில் புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ். ரகுபதி மலர் தூவி மரியாதை செய்தார். நிகழ்வுகளில் புதுக்கோட்டை தெற்கு ஒன்றியச் செயலாளர், மாவட்ட கவுன்சிலர் மு.க.ராமகிருஷ்ணன், முன்னாள் ஒன்றிய குழுத் தலைவர் மு.கலியமூர்த்தி, க.சி.ஆசை தம்பி மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## தி.மு.க மாணவர் அணி

# நகர, பகுதி, ஒன்றிய, பேரூர்க் கழகப் பொறுப்புகளுக்கான நேர்காணல்!

## மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ. அறிவிப்பு!

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க, கழக ஒருங்கிணைப்புக் குழு ஆய்வுக் கூட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளர், இளந்தலைவர், உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ. ராசா, எம்.பி., வழிகாட்டுதலுடன், கழக மாணவர் அணியின் நகர, பகுதி, ஒன்றிய, பேரூர் ஆகிய அளவில் நிர்வாகிகள் நியமிக்க நேர்காணல் கீழ்காணும் வகையில் செயல்படுத்தப்பட உள்ளது.

நகர, பகுதி, ஒன்றிய, பேரூர் அமைப்பு: ஒரு அமைப்பாளர், ஐந்து துணை அமைப்பாளர்கள் என்று நியமிக்கப்பட உள்ளனர். அதில், பெண் துணை அமைப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும். பொறுப்புக்கு விண்ணப்பிப்பவர்கள் 30 வயதிற்குட்பட்டவர்களாய் இருக்க வேண்டும் என்றும், அவர்கள் கல்லூரி படிப்பை முடித்திருக்க வேண்டுமெனவும், அல்லது தற்போது கல்லூரியில் பயிலுக்கூடிய மாணவர்களும் விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. குறிப்பாக, ஒரு துணை அமைப்பாளர் தற்போது கல்லூரியில் பயிலும் மாணவராக இருக்க வேண்டும். (ஏதாவது பட்டப் படிப்பு (அ) பட்டயப் படிப்பு).

மேற்படி முறைகளை பின்பற்றி, நகர, பகுதி, ஒன்றிய, பேரூர், வட்ட அளவிலான மாணவர் அணி அமைப்பின் நிர்வாகிகளை விரைவாக தேர்ந்தெடுக்க, கழக மாணவர் அணியின் மாநில நிர்வாகிகள் முன்னிலையில் கீழ்காணும் அட்டவணைப்படி நேர்காணல் நடைபெற உள்ளது. மாவட்டக் கழக செயலாளர்கள் கழக மாணவர் அணியின் மாநில நிர்வாகிகளுக்கு முழு ஒத்துழைப்பை வழங்கி, நேர்காணல் நடத்திட உரிய ஏற்பாடுகளை செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறது.

கழக மாணவர் அணி மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக செயலாளர்களுடன் கலந்து பேசி நேர்க்காணல் நடத்தி அதில் தகுதி உடையவர்களை தேர்ந்தெடுத்து நகர, பகுதி, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்களின் ஒப்புதலுடன் மாவட்டக் கழக செயலாளர்களின் பரிந்துரை கடிதத்தை பெற்று இம்மாத இறுதிக்குள் நிறைவு செய்து, என்னிடம் அக்டோபர் மாதம் 6ந் தேதிக்குள் ஒப்படைக்கும் படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

| பெயர் | நேர்காணல் தேதி | கழக மாவட்டம் |
|---|---|---|
| **இரா. ராஜீவ்காந்தி** | | |
| அதலை பி. செந்தில்குமார் | 20.09.2024 | தூத்துக்குடி வடக்கு |
| | 20.09.2024 | தூத்துக்குடி தெற்கு |
| | 19.09.2024 | கன்னியாகுமரி கிழக்கு |
| | 19.09.2024 | கன்னியாகுமரி மேற்கு |
| | 21.09.2024 | திருநெல்வேலி மத்திய |
| | 24.09.2024 | இராமநாதபுரம் |
| பி.எம். ஆனந்த் | 17.09.2024 | கடலூர் கிழக்கு |
| | 13.09.2024 | கடலூர் மேற்கு |
| | 18.09.2024 | கரூர் |
| | 10.09.2024 | தஞ்சை வடக்கு |
| பூர்ணசங்கீதா சின்னமுத்து | 14.09.2024 | விருதுநகர் வடக்கு |
| | 14.09.2024 | விருதுநகர் தெற்கு |
| | 22.09.2024 | தென்காசி வடக்கு |
| | 22.09.2024 | தென்காசி தெற்கு |
| **சி. ஜெரால்டு** | | |
| சேலம் ரா. தமிழரசன் | 13.09.2024 | தருமபுரி கிழக்கு |
| | 13.09.2024 | தருமபுரி மேற்கு |
| | 11.09.2024 | திருவண்ணாமலை வடக்கு |
| | 11.09.2024 | திருவண்ணாமலை தெற்கு |
| | 27.09.2024 | திருச்சி தெற்கு |
| | 19.09.2024 | காஞ்சிபுரம் வடக்கு |
| | 18.09.2024 | காஞ்சிபுரம் தெற்கு |
| கா. அமுதரசன் | 12.08.2024 (மதியம்) | கள்ளக்குறிச்சி தெற்கு |
| | 20.08.2024 (காலை) | மயிலாடுதுறை |
| | 20.08.2024 (மதியம்) | நாகை |
| | 19.08.2024 | திருவாரூர் |
| ஜெ. வீரமணி | 12.09.2024 | கிருஷ்ணகிரி கிழக்கு |
| | 09.09.2024 | இராணிப்பேட்டை |
| **எஸ். மோகன்** | | |
| மன்னை த. சோழராஜன் | 16.09.2024 | சென்னை வடகிழக்கு |
| | 01.10.2024 | சென்னை கிழக்கு |
| | 20.09.2024 | சென்னை தெற்கு |
| | 29.09.2024 | திருவள்ளூர் கிழக்கு |
| | 30.09.2024 | திருவள்ளூர் மத்திய |
| | 14.09.2024 | திருவள்ளூர் மேற்கு |
| கா. பொன்ராஜ் | 21.09.2024 | நாமக்கல் கிழக்கு |
| | 21.09.2024 | நாமக்கல் மேற்கு |
| | 22.09.2024 | சேலம் கிழக்கு |
| | 22.09.2024 | சேலம் மேற்கு |
| | 22.09.2024 | சேலம் மத்திய |
| வி.ஜி. கோகுல் | 19.09.2024 | திருப்பூர் வடக்கு |
| | 19.09.2024 | திருப்பூர் தெற்கு |
| | 18.09.2024 | ஈரோடு வடக்கு |
| | 18.09.2024 | ஈரோடு தெற்கு |
| | 26.09.2024 | நீலகிரி |
| | 04.10.2024 | தேனி வடக்கு |
| | 04.10.2024 | தேனி தெற்கு |

அண்ணா அறிவாலயம்
சென்னை - 18
நாள்: 11 - 9 - 2024

**சி.வி.எம்.பி.எழிலரசன்** எம்.எல்.ஏ.,
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

## தமிழர் நலன் சார்ந்த கோரிக்கைகளை முன்வைத்து – சென்னை வளர்ச்சிக் கழகத்தின் தலைவர்

# வி.ஆர்.எஸ் சம்பத் - மொரீஷியஸ் பிரதமருடன் சந்திப்பு!

## மொரீஷியஸ் மேனாள் குடியரசுத் தலைவரும் உடனிருந்தார்!

மொரிஷியஸ், செப். 13-

சென்னை வளர்ச்சிக் கழகத்தின் தலைவரும் உலகத் தமிழர் பொருளாதார அறநிறுவனத்தின் தலைவருமான டாக்டர் வி.ஆர்.எஸ். சம்பத் அவர்கள் செப்டம்பர் 9, 2024 அன்று மொரீஷியஸ் நாட்டின் பிரதமர் பிரவீந்த் குமார் ஜக்நாத் அவர்களை மொரீஷியஸ் பிரதமர் அலுவலகத்தில் சந்தித்தார். கோலாலம்பூரில் 2024, நவம்பர் 15.17 வரை நடைபெறவுள்ள, உலகத் தமிழர் பொருளாதார அறநிறுவனம் நடத்தும் உலகத் தமிழர் பொருளாதார மாநாட்டில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்ள அழைப்பு விடுத்தார்.



இந்த மாநாட்டில் உலகம் முழுவதும் உள்ள தொழில்துறை சார்ந்த தமிழர்கள் பங்கேற்பதால் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை விரிவுபடுத்த ஏதுவாகும் மேலும், தமிழ்நாடு மற்றும் மொரீஷியஸ் நாட்டுறவு மேம்படுவதற்கான பல்வேறு செயல்பாடுகள் குறித்து விரிவாக விவரித்துப் பேசினார்.

குறிப்பாக தமிழர் மேம்பாடு, கல்வி கலை - கலாச்சார உறவுகள் குறித்தும் விரிவாக விளக்கினார். சென்னைக்கு மருத்துவ சிகிச்சை மற்றும் உயர்கல்விப் படிப்பை மேற்கொள்ளும், கலை, கலாச்சாரப் பயணிகள் நலனை முன்னிட்டு மொரீஷியஸ் நாட்டிலிருந்து வாரம் இருமுறை விமான சேவையை விரிவுபடுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

தமிழகத்திலுள்ள உலகத் தரம் வாய்ந்த அதிநவீன சிகிச்சை வசதிகள், மருத்துவச் சேவைகள், மருத்துவச் சுற்றுலாவிற்கான வாய்ப்புகள் குறித்தும் உயர்கல்விக்கான வாய்ப்புகள் குறித்தும் குறிப்பாக, தகவல்தொழில்நுட்பக் கல்வி, மருத்துவக் கல்வி, ஆராய்ச்சிக் கல்வி உள்ளிட்ட கல்வி வளங்கள் குறித்து மிகத் தெளிவாக எடுத்துக் கூறி, தமிழ்நாடு அரசின் சிறப்புத் திட்டங்களையும் விளக்கிக் கூறியதுடன் மொரீஷியஸ் பிரதமர் அவர்களைத் தமிழ் நாட்டுக்கு நேரில் வருகை தந்து இத்தகைய வசதிகளைக் காணவேண்டும் என்றும் அன்போடு அழைத்தார். அவரும் இதைக் கனிவுடன் பரிசீலிப்பதாகக் கூறினார்.

இத்துடன் தமிழ்நாட்டில் மொரீஷியஸ் தொழில் துறையினர் முதலீடு செய்வதற்கும் கல்வி வளங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும் பிரதமரிடம் எடுத்துரைத்தார். இதனை மையப்படுத்தி சிறப்பு நிகழ்வு ஒன்றினை நடத்தவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். இவற்றையெல்லாம் பரிசீலித்து தக்க வகையில் நடவடிக்கை எடுப்பதாக பிரதமர் உறுதியளித்தார்.

30 நிமிடங்களுக்கு மேல் நீடித்த இந்தச் சந்திப்பின் போது மிக விரிவாக பல்வேறு விடயங்கள் குறித்து வி.ஆர்.எஸ். சம்பத் அவர்கள் பிரதமரிடம் விளக்கிக் கூறினார். மொரீஷியஸ் பிரதமர் அவர்களும் ஆர்வத்துடன் வி.ஆர்.எஸ் சம்பத் அவர்களிடம் பல்வேறு செய்திகளைப் பகிர்ந்து கொண்டார். நாட்டின் மேனாள் குடியரசுத் தலைவர் டாக்டர் பரமசிவம் பிள்ளை வையாபுரி அவர்கள் உடனிருந்தார்.

இந்தச் சந்திப்பு குறித்து வி.ஆர்.எஸ். சம்பத் அவர்கள் குறிப்பிடும்போது மிகவும் பயனுள்ள முக்கியமான சந்திப்பாக இது அமைந்தது. இதன் வழியாக பல ஆக்கபூர்வமான பணிகள் உடனடியாக நிறைவேறும் என்றும் இது ஒரு மனநிறைவான சந்திப்பு என்றும் தெரிவித்தார்.

## பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா!

# நெல்லை கிழக்கு மாவட்டத்தில் திருவுருவச் சிலைக்கு மரியாதை!

## மாவட்டச் செயலாளர் இரா. ஆவுடையப்பன் வேண்டுகோள்!

நெல்லை,செப்.13-

முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு களக்காடு நகரம் மெயின் ரோட்டில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருஉருவச் சிலைக்கு வருகிற 15.09.2024 ஞாயிறு அன்று காலை 9 மணிக்கு மாலை அணிவிக்கும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது.கழக நிர்வாகிகள் பெருந்திரளாக பங்கேற்க வேண்டும். என நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அந்த அறிவிப்பில் அவர் தெரிவித்திருப்பதாவது.

தென்னாட்டு காந்தி,இந்நாட்டு இங்கர்சால்,தமிழ்நாடு என பெயர் சூட்டி தனிச்சிறப்பு தந்த பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள் செப்டம்பர் 15



ஆகும்.அன்று ஞாயிறு காலை 9.30 மணி அளவில் களக்காடு மெயின் ரோட்டில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்கள் திருவுருவச் சிலைக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் எனது தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய,நகர,பேரூர், கழக செயலாளர்கள்,நிர்வாகிகள்,மாவட்ட பிரதிநிதி கள், நகர்புற, ஊரக உள்ளாட்சி, பிரதிநிதிகள்,சார்பு அணிகளின் அமைப்பாளர்கள்துணை அமைப்பாளர்கள் மற்றும் கழகதோழர்கள்,நிர்வாகிகள், அனை வரும் பெருந்திரளாக கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று திருநெல்வேலி கிழக்கு மாவட்டத்தில் உள்ள ஒன்,நகர, பேரூர்,கிளை,வார்டு உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் பேரறிஞர் அண்ணா அவர்களின் புகழை போற்றிடும் வகையில் அன்னாரது திருவுருவச் சிலைக்கும், திருவுருவப் படத்திற்கும் அவரவர்கள் பகுதிகளில் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்து பேரறிஞர் அண்ணா அவர்களின் புகழை போற்றிடவும் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## வடசென்னை – பெரியார் நகரில் தபால் அலுவலகத்துடன் இணைந்த

# பாஸ்போர்ட் சேவை மையத்தை உடனடியாகத் துவங்கிடுவீர்!

## ஒன்றிய அமைச்சருக்கு – கலாநிதி வீராசாமி எம்.பி. கடிதம்!

சென்னை, செப்.13-

வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி எம்.பி. ஒன்றிய வெளிவிவாகரத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் அவர்களுக்கும், ஒன்றிய தகவல் தொடர்பு அமைச்சர் ஜோதிராதித்தியா சிந்தியா அவர்களுக்கும் கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் அவர் கூறியுள்ளதாவது.

கடந்த 10.08.2024 அன்று ஒன்றிய வெளிவிவாகரத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் அவர்களுக்கும் தகவல் தொடர்பு அமைச்சர் ஜோதிராதித்தியா சிந்தியா அவர்களுக்கும் வடசென்னை நாடாளுமன்ற தொகுதியில் ஒரு பாஸ்போர்ட் சேவை வழங்கும் அலுவலகம் கூட இல்லாமையால் உடனடியாக ஒரு பாஸ்போர்ட் வழங்கும் அலுவலகத்தை அமைத்து தர வேண்டும் அல்லது இத்தொகுதிகள் அமைந்துள்ள தபால் அலுவலகங்களில் ஒன்றினைத் தேர்ந்தெடுத்து அங்கு தபால் அலுவலகத்துடன் இணைந்த பாஸ்போர்ட் சேவை வழங்கும் அலுவலகத்தை அமைக்க வேண்டும் என்று கோரி இருந்தேன்.

இக்கடிதத்திற்குப் பதிலளிக்கும் வகையில் தகவல் தொடர்பு அமைச்சகத்திடம் இருந்து 23.08.2024 தேதியிட்ட கடிதம் எனக்கு வந்துள்ளது. அக்கடிதத்தில் ஒவ்வொரு நாடாளுமன்ற தொகுதியிலும் ஒரு தபால் அலுவலகத்துடன் இணைந்த பாஸ்போர்ட் சேவை வழங்கும் அலுவலகத்தை அமைக்க வேண்டும் என்று ஒன்றிய அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது என்றும் அதன்படி ஆர்.கே. நகர் மற்றும் பெரம்பூர் பகுதியில் அமைந்துள்ள சென்னை பொது தபால் அலுவலகத்தில் (GPO) இச்சேவை வழங்கப்பட்டு வருகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஒன்றிய அரசுக்கு நான் அளிக்கும் விளக்கம் யாதெனில், மேற்படி சென்னை பொது தபால் அலுவலகத்துடன் இணைந்த பாஸ்போர்ட் வழங்கும் அலுவலகமானது மத்திய சென்னை தொகுதிக்கு உட்பட்ட துறைமுகம் சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த பகுதியில் அமைந்துள்ளது. நான் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தபடி வடசென்னை பாராளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட எந்த தபால் அலுவலகத்திலும் பாஸ்போர்ட் சேவை வழங்கப்படவில்லை என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்கின்றேன். எனது தொகுதியைச் சேர்ந்தவர்கள் பாஸ்போர்ட் சேவை பெறுவதற்கு வேறு தொகுதிகளில் அமைந்துள்ள அலுவலகங்களைத் தேடி செல்ல வேண்டியதாக உள்ளது. வடசென்னை நாடாளுமன்ற தொகுதியில் அமைந்துள்ள தபால் அலுவலங்களில் பெரியார் நகரில் அமைந்துள்ள தபால் அலுவலகம் பாஸ்போர்ட் சேவை வழங்கும் அலுவலகத்தையும் தொடங்குவதற்கு ஏற்ற உட்கட்டமைப்பை



பெற்றுள்ளது.

மேலும் சென்னையில் பாஸ்போர்ட் வேண்டி விண்ணப்பங்கள் செய்பவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் உயர்ந்து வருகிறது. சென்னை பாஸ்போர்ட் அலுவலகம் வழங்கியுள்ள விவரங்களின் அடிப்படையில் கடந்த 2023 ஆம் ஆண்டு 5,19,682 பேருக்கு பாஸ்போர்ட் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இந்த எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டுக்கு 4,74,472 ஆகவும் 2019ஆம் ஆண்டில் 4,72,274 ஆகவும் இருந்துள்ளது. எனவே சென்னை மண்டல பாஸ்போர்ட் அலுவலகமும் மேலும் புதிய தபால் அலுவலகத்துடன் இணைந்த பாஸ்போர்ட் சேவை வழங்கும் அலுவலகத்தை அமைப்பது குறித்து ஆராய்ந்து வருவதாக தெரிகிறது.

பெருகி வரும் விண்ணப்பங்களைக் கருத்தில் கொண்டும் ஏஜெண்டுகள் மூலம் இல்லாமல் நேரடியாக விண்ணப்பிப்பவர்களின் காத்திருப்பு நேரத்தை குறைப்பதற்காக "மே ஐ ஹெல்ப் யு" (உங்களுக்கு உதவட்டுமா) என்னும் பிரிவை மண்டல பாஸ்போர்ட் அலுவலகம் துவங்கியுள்ளது.

எனவே அதிகரித்து வரும் பாஸ்போர்ட் விண்ணப்பங்களுக்கு உடனடியாக சேவை வழங்கவும் அனைத்து பாராளுமன்ற தொகுதிகளிலும் ஒரு போஸ்ட் ஆபீஸ் உடன் இணைந்த பாஸ்போர்ட் அலுவலகம் அமைப்பது என்று ஒன்றிய அரசு எடுத்துள்ள கொள்கை முடிவின் அடிப்படையில் எனது தொகுதிக்குட்பட்ட பெரியார் நகரில் அமைந்துள்ள தபால் அலுவலகத்தில் பாஸ்போர்ட் வழங்கும் சேவையை உடனடியாக துவங்க தக்க நடவடிக்கைகளை எடுக்கும்படி வெளிவிவகாரத்துறை அமைச்சகத்தையும் தகவல் தொடர்பு அமைச்சகத்தையும் கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.



விருதுநகர் வடக்கு மாவட்டம் சிவகாசி மாநக தி.மு.க. நிர்வாகிகள் பொது உறுப்பினர்கள் ஆலோசனை கூட்டம் மாணிக்கம் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சிவகாசி மாநகர செயலாளர் உதய சூரியன் பல்வேறு தீர்மானங்களை வாசித்தார். இந்நிகழ்ச்சியில் மாநகர தலைவர் மேயர் சங்கீதா இன்பம், துணை மேயர் விக்னேஷ் பிரியா காளிராஜன், பொருளாளர் வெள்ளைத் துரை பாண்டியன், மாநில வர்த்தக அணி அமைப்பாளர் வனராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சந்திரன், அதிவீரம்பட்டி செல்வம், பொது குழு உறுப்பினர் பால்ராஜ், மாவட்ட துணை செயலாளர் ராமமூர்த்தி, மாவட்ட பிரதிநிதி ராஜேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.




தருமபுரி மேற்கு மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் எஸ்.சரவணன் ஏற்பாட்டில் பையர்நத்தம் கலைஞர் திருமண மண்டபத்தில் நடைபெற்ற பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் 2026 சட்டமன்ற தேர்தல் மற்றும் கழக ஆக்கப்பணிகள் குறித்து ஆலோசனைகள் வழங்கி சிறப்புரை ஆற்றினார்.கூட்டத்தில் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி,மாநில நிர்வாகி சத்தியமூர்த்தி, பொ.மல்லாபுரம் பேரூர் கழக செயலாளர் கு.கௌதமன்,ஒன்றிய நிர்வாகிகள் வே.செல்வன், பொ.இராஜேந்திரன், ஜாகிதாசெரீப், கதிரவன்,இரா.ரவி, பன்னீர்செல்வம், பூ.ராமன்,சேகர்,அரவிந்த், உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.